## ‘திராவிட மாடல்’ ஆட்சியில் மீனவர்களுக்கான மாநாடு –

# 2.77 இலட்சம் மீனவக் குடும்பங்களுக்கு ரூ.9 ஆயிரம் கோடியில் நல உதவிகள்!

## சட்டப் பேரவை - மீன்வளத்துறை மானியக் கோரிக்கையில் இராமநாதபுரம் காதர்பாட்சா முத்துராமலிங்கம் பேச்சு!

**சென்னை, செப்.9- சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் இராமநாதபுரம் தொகுதி காதர்பாட்சா முத்துராமலிங்கம் பேசுகையில் திராவிட மாடல் ஆட்சியில் மீனவர்களுக்கு 2.77 இலட்ச மீனவர்களுக்கு ரூ.9 ஆயிரம் கோடி 30 உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் காதர்பாட்சா முத்துராமலிங்கம் பேசியதாவது:-

மீனவர் நலன் மற்றும் மீன்வளத் துறையினுடைய மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மீன்வளத் துறையில் மீனவர்களுக்காக அடையாள அட்டை வழங்கி மீனவர்களுடைய வாழ்வாதாரத்தை உறுதி செய்திடும் வகையில் டீசல் மானியம் என்ற தொலைநோக்கு சிந்தனைகளிலே மீனவர்களுடைய நலனில் அக்கறை கொண்டு கடந்த 5 முறை தமிழ்நாட்டில் நல்லாட்சி செய்த தமிழகத்தை செதுக்கிய சிற்பி, வங்கக் கடலோரம் துயில் கொள்ளும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நான் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மீன்வளம் என்றிருந்த இந்தத் துறையை மீனவளம் மற்றும் மீனவர் நலன் என்று மீனவர்களுடைய நலனுக்காக துறையை மாற்றி கடந்த 5 ஆண்டுக்காலம் பல்வேறு திட்டங்களை இந்த மீனவர்களுக்காக, ஏன் இந்தியாவில் எந்தவொரு முதலமைச்சரும் செய்திடாத அளவில் மீனவர் நலன் காக்கக்கூடிய மாநாட்டை நடத்தி, அந்த மாநாட்டின்மூலமாக நல்ல பல திட்டங்களை மீனவர் துறைக்குத் தந்த திராவிட மாடல் முதலமைச்சர், தாயுமானவர், உண்மையான மீனவர்களுடைய பாதுகாவலர். இந்த அவையில் என்னை இரண்டாவது முறை பேசுவதற்கான வாய்ப்பைத் தந்த என் நெஞ்சம் நிறைந்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் விளையாட்டுத் துறையில் தான் பொறுப்பு வகிக்கிறபொழுது, இந்தியாவில் எந்தவொரு அமைச்சரும் செய்திடாத அளவில் விளையாட்டுத் துறையில் இருக்கக்கூடிய விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு தந்து, அந்த ஆணையைப் பிறப்பித்த மகத்தான சாதனை தந்த எங்களுடைய எதிர்காலத் தலைவர் அவருக்கும் என்னுடைய வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தினுடைய துணைத் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய இயக்கத்தினுடைய கொறடா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலையோடு இந்த பேரவையை நீங்கள் வழிநடத்துகிறீர்கள், உங்களுக்கும் என்னுடைய வணக்கங்கள். இந்த அவையில் என்னுடைய தந்தைக்குப் பின்னால், என்னை வழிநடத்தி, செம்மைப்படுத்தக்கூடிய முன்னாள் நிதித் துறை அமைச்சர் திருச்சுழி சட்டமன்ற உறுப்பினர் எனது மரியாதைக்குரிய அத்தான் தங்கம் தென்னரசு அவர்களுக்கும் என்னுடைய வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசியத்தையும், தெய்வீகத்தையும் தனது இரு கண்களாகப் பாவித்து, அரசியல் வாழ்வில் தூய வாழ்வு வாழ்ந்து இந்த நாட்டின் சுதந்திரப் போராட்டத் திற்காக 4,000 நாட்கள் சிறைக்குப்பின் இருந்து மறைந்த ஒப்பற்ற தலைவர் தெய்வீகத் திருமகன் எனது பெரிய தந்தை பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கும் எனது வணக்கங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதி என்பது ஒரு மத நல்லிணக்கம், சமூக நீதி, சகோதரத்துவத்திற்கு எடுத்துக்காட்டான ஒரு தொகுதியில் இரண்டாவது முறையாக மக்கள் பணியாற்றுவதற்காக வாய்ப்புத் தந்த தொகுதி மக்களுக்கும் என்னுடைய வணக்கங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டணிக் கட்சியிலுடைய தோழர்களுக்கும், தேர்தல் களத்தில் என்னோடு களமாடிய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியிலுடைய தோழர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பொருளாதார மேம்பாடு!

மீனவர் வாழ்க்கை. மீனவர் வாழ்க்கை என்பது, எண்ணிப் பார்க்க வேண்டும். மீனவர் வாழ்க்கை என்பது வெறும் பொருளாதாரம் மட்டுமல்ல. அது கடலோரப் பகுதிகளில் இருக்கக்கூடிய மீனவ கிராமங்களுடைய வாழ்வாதாரம், மீனவர்களுடைய பொருளாதார மேம்பாடு அனைத்தும் உள்ளடக்கிய ஒரு வாழ்வியலாக இருக்கிறது.

கடந்த காலங்களில் நம்முடைய தமிழ்நாடு பாரம்பரிய மீனவர்கள் என்பவர்கள் இந்துமகா கடலையும், தெற்கு வங்காளத்தையும் ஓர் ஏரிபோல் கட்டி ஆட்சி செய்திருக்கிறார்கள். அதனால்தான் நம்முடைய பேரரசர்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் கடல் கடந்து பிற நாடுகளைப் பிடிப்பதற்கு நம்முடைய பாரம்பரிய மீனவர்களுடைய வானிலை அறிவும், நீரியல் அறிவும் இருந்த காரணத்தினால்தான் அவர்களுடைய பகுதிகளில் சென்று ஆட்சி செய்வதற்கு ஏதுவாக இருந்திருக்கிறது. அப்படிப்பட்ட நம்முடைய பாரம்பரிய மீனவர்கள் 21 ஆம் நூற்றாண்டில் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி, எங்களுடைய மீனவர்களுடைய வாழ்வாதாரம் என்பது ஒரு கேள்விக்குறியான இடத்தில் வந்திருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்றால், இன்று ஏற்பட்டிருக்கக்கூடிய இயற்கை மாற்றம். உலகத்தில் இருக்கக்கூடிய எந்த ஜீவராசிகளும் இயற்கையோடு தன்னை இணைத்து வாழக்கூடிய பாங்கைப் பெற்றிருப்பார்கள்.

ஆனால், அந்த மீனவக்குடி மட்டும் இயற்கையை எதிர்த்து தன்னையே நாட்டிக்கொள்ளக்கூடிய கடல், அலை, ஆழிப்பேரலை, வெள்ளம், மழை, காற்று போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கு தன்னை நிலை நிறுத்திக்கொண்டு வாழக்கூடிய மீனவப் பெருங்குடி மக்கள் தற்போது பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியிருக்கின்றார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், நாம் நீண்ட நெடிய கடற்கரையைக் கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ 1,076 கி.மீ. பரப்பளவு கொண்ட கடற்கரை என்பது பெரிய கடற்கரையாகும். திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியிலிருந்து கன்னியாகுமரி நீரோடி வரை ஒரு நீண்ட பரப்பளவுடன் ஏறத்தாழ 14 மாவட்டங்களை உள்ளடக்கியதாக தமிழ்நாட்டின் நீரோடை ஆதாரம் இருக்கிறது. இவற்றில், கடற்கரையை நாம் 4 வகைகளாக பிரித்துக்கொள்ளலாம். 1. சோழமண்டல கடற்கரை, சோழமண்டல கடற்கரை என்பது கோடியக்கரை முதல் மீனவக்குப்பம் கூனங்குப்பம் வரை இருக்கக்கூடிய பகுதியாகும். பாக் ஜலசந்தி என்பது, கோடியக்கரை முதல் பாம்பன் தலைமன்னார் பகுதியில் இருக்கக்கூடிய இலங்கை மன்னார் தீவு வரையில் இருப்பதாகும்; இந்தப் பகுதியில் வாழக்கூடிய மீனவர்கள் அதிக இன்னல்களோடு வாழகின்றார்கள்; அதற்கடுத்ததாக பாக் ஜலசந்தியிலிருந்து மன்னார் தீவுப் பகுதி என்பது, மன்னார் வளைகுடாவிலிருந்து கன்னியாகுமரி வரை இருக்கக்கூடிய பகுதியாகும்; இவ்வாறாக நாம் கடற்கரைப் பகுதியைப் பிரித்துக்கொள்ளலாம். கன்னியாகுமரியிலிருந்து நீரோடிப் பகுதியை மேற்கு மண்டலக் கடற்கரைப் பகுதியென்று மீனவக் கடற்கரையை நான்காகப் பிரித்து, அப்பகுதிகளில் மீன்பிடித் தொழிலை செய்துவருகிறார்கள். இந்த 4 பகுதிகளில், இந்திய அளவில் மீன் உற்பத்தியில் தமிழ்நாடு, 5வது இடத்தில் இருக்கிறது. ஏறத்தாழ 1.50 இலட்சம் மெட்ரிக் டன் மீன் உற்பத்தியை தமிழகம் செய்கிறது.

### மன்னார் வளைகுடா பகுதி!

அதன் மூலமாக, ரூ.6,958 கோடி தமிழ்நாட்டிற்கு வருவாய் ஈட்டப்படுகிறது. இந்தியாவின் GDPல், 1 சதவிகிதம் மீன் உற்பத்தியின் மூலமாக, மதிப்புக் கூட்டுத் தொழிலின் மூலமாக தமிழகத்திற்கு வருவாய் வருகிறது. இவ்வாறு இருக்கக்கூடிய மீனவர்களுக்கு குறிப்பாக, தமிழ்நாட்டின் ஏறத்தாழ 20 சதவிகித மீன் உற்பத்தி, இராமநாதபுரத்திலிருந்துதான் கிடைக்கிறது. ஆனால், அந்த மீனவர்கள் மன்னார் வளைகுடா பகுதியில் இலங்கைக் கடற்கரையின் மூலமாக கடந்த 10 ஆண்டுகாலமாக பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியிருக்கின்றனர். 2018 ஆம் ஆண்டில் இலங்கையில் கடல்கடந்து மீன்பிடிக்க வரக்கூடியவர்களின் உடைமை களைக் கையகப்படுத்துவோம் என்று ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர்தான், மன்னார்தீவுப் பகுதியில் வாழ்கின்ற மீனவர்களின் வாழ்வாதாரம் மிகப்பெரிய கேள்விக்குறியானது. அவர்கள் எல்லையைக் கடக்காமல், நம்முடைய எல்லைப் பகுதிகளில் மீன்பிடிக்கும்போதுகூட, காற்றின் வேகத்தின் காரணமாக, அவர்கள் இழுத்துச் செல்லப்பட்டால், இலங்கை அரசு அவர்களைப் பிடித்து சிறைவாசம் செய்வதோடு மட்டுமல்லாமல், அவர்களது உடைமை களைக் கையகப்படுத்திக்கொள்கிறார்கள். 2018 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிலை இருந்தபோது, திராவிட மாடல் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மீனவர் சங்கப் பிரதிநிதிகளை, இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்கிற வகையில் நான் முன்னாள் முதலமைச்சர் அவர்களை சந்திப்பதற்கு அழைத்துவந்தேன். அப்போது அவர்களது பிரதான கோரிக்கையாக, ஏறத்தாழ 2018 முதல் 2021 ஆம் ஆண்டு வரை சிறைபிடிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த விசைப்படகு மீனவர்களுக்கு மானியம் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அதை முன்னாள் முதலமைச்சர் அவர்களிடத்தில் அந்த கோரிக்கையை வைத்தவுடன், தாயுமானவராக தாயுள்ளத்தோடு, அந்த பிடிபட்ட மீனவர்கள் அனைவருக்கும் முதல் இழப்பீடாக ரூ.5.00 இலட்சம் வழங்கினார்கள். அதற்கு பின்னர் 2021 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டுவரை பிடிபட்ட ஏறத்தாழ 125 விசைப்படகுகளுக்கு ரூ.6.00 இலட்சம் வழங்கினார்கள். அதற்கு பின்னர், 2024 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டுவரை பிடிபட்ட மீனவர்களுக்கு ரூ.8.00 இலட்சமாக உயர்த்திக் கொடுத்தார்கள். இது அந்த மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரத்தை மீண்டும் மீட்டு உறுதி செய்வதற்கான ஒரு மகத்தான திட்டத்தைத் தந்தார்கள்.

நான் இப்போது இந்த அரசிடம் வலியுறுத்துவது, நீங்கள் அறிவித்திருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் ஏறத்தாழ 1,291 மீனவர்கள் கடந்த 5 ஆண்டுகளில் சிறைபிடிக்கப்பட்டார்கள்; அவர்களில் 1,253 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள் என்று தெரிவித்திருக்கிறீர்கள். நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் தெரிவித்திருந்த அந்த குறிப்பிற்கு சொந்தக்காரர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏன் இந்த அவையில் நான் பதிவு செய்கிறேன் என்றால், அவர் மீனவப் பிரதிநிதிகளை ஒவ்வொரு நிதிநிலை அறிக்கைக்கு முன்பாகவும் சந்தித்து, அவர்களுடன் கலந்தாலோசித்து, அவர்களது கோரிக்கைகளைக் கேட்டு, அதற்கேற்ப திட்டங்களைத் தந்தார். அதற்கொரு குழு அமைத்தார்; அந்தக் குழுவில் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தலைமை தாங்கினார்கள்; நிதித் துறை அமைச்சர் அவர்கள் அக்குழுவின் உறுப்பினராக இருந்தார்கள்; நிதித் துறை செயலாளராக இருந்தார்கள்; முன்னாள் முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர்கள், தொகுதி சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர் என்கிற வகையில் நானும், கடற்கரையோர மாவட்டங்களில் இருக்கக்கூடிய மீனவப் பிரதிநிதி சங்கங்கள் அனைவரையும் வரவழைத்து, ஒரு கருத்துக்கேட்பின் மூலமாக பல்வேறு திட்டங்களைத் தந்தார்கள். அதனால்தான் இலங்கையில் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் மீட்டெடுக்கப்பட்டது என்பதை உங்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் நான் இதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

### கச்சத்தீவு பிரச்சினை!

சட்டத் துறை அமைச்சர் அவர்கள், 2018 ஆம் ஆண்டு இலங்கையில் நாட்டுடமையாக்கப்பட்ட பிறகுதான் மீனவர்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டன. அங்கு ஒரு சட்டம் இயற்றினார்கள். அதற்குப்பிறகுதான் அந்தப் பிரச்சினை வருகிறது. ஐந்து ஆண்டுகாலம் அந்த மீனவர்களுக்கு எந்தவொரு நிவாரணமும் கிடைக்கவில்லை. எங்களுடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் வந்தவுடன், நான் தான் அவர்களை அழைத்து வந்து முதன்முதலில் ஏறத்தாழ 150 நபர்களுக்குக் கொடுத்தார்கள் என்பதை நான் இந்த அவையில் பதிவு செய்கிறேன். மற்றொன்று, கச்சத் தீவு குறித்து நீங்கள் சொன்னீர்கள். இந்த கச்சத் தீவு இருக்கிறபோது எங்களுடைய இராமநாதபுரத்தினுடைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் தேவர் தந்த தேவர் திரு. மூக்கையா தேவர் அவர்கள், இந்த கச்சத் தீவை எதிர்த்துத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பாராளுமன்றத்தில் பேசினார்; இது வரலாறு.



தயவுசெய்து திராவிட முன்னேற்றக் கழகம் கொடுத்ததாக நீங்கள் பதிய வைக்க வேண்டாம். இது பாராளுமன்றத்தில் முடிவெடுக்கப்பட்டது. ஒரு மாநில அரசினுடைய உரிமைகளுக்கு உட்பட்டுத்தான் இது நடக்கும். அதையும் இங்கே அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இரண்டாவது, தற்போது நீங்கள் தெரிவித்த திட்டத்தில்நாட்டுடமையாக்கப்பட்ட பிறகு இலங்கையில் இருக்கக்கூடிய அரசின் காரணமாக மீனவர்களுக்கான பிரச்சினையை நான் பதிவு செய்தேன். இந்த 8 இலட்சம் ரூபாய் என்பது எங்களுடைய தி.மு.க. ஆட்சியில் கொடுக்கப்பட்டதை நீங்கள் அப்படியே கொடுத்திருக்கிறீர்கள். அதை உயர்த்திக் கொடுக்கவில்லை. அதைத் தயவுசெய்து இங்கு அவையில் நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக நம்முடைய மண்டபம் மாநாடு. இந்த மாநாட்டைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், இதுவரை எந்தவொரு முதலமைச்சரும் செய்திடாத அளவில் தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களைச் சார்ந்த 30 ஆயிரம் மீனவர்களைத் திரட்டி, அந்த மீனவர்களுக்கு ஏறத்தாழ 2 இலட்சத்து 77 ஆயிரத்து 347 குடும்பங்களைச் சார்ந்த மீனவர்களுக்கு 9,347 கோடி ரூபாயில் பல்வேறு திட்டங்களை வழங்கினார்கள். அதில்தான் மீன்பிடி தடைக்காலத்திற்கான நிவாரணத்தை ரூ.5,000லிருந்து ரூ.8,000 ஆக உயர்த்தினார்கள். டீசல் மானியத்தை ரூ.1,800லிருந்து ரூ.1,900 ஆக உயர்த்திக் கொடுத்தார்கள். நாட்டுப் படகு மீனவர்களுக்கு ரூ.4,000லிருந்து ரூ.4,400 ஆக உருவாக்கித் தந்தார்கள். மொத்தம் 10 திட்டங்களைக் கொண்டுவந்தார்கள். இதுமட்டுமல்லாமல், கடந்த 20 ஆண்டுகாலமாக 60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்கள் எந்தவொரு benefitம் அடையாமல் இருந்தார்கள். அந்த 60 வயதிற்கு மேற்பட்டவர்களும் மீன்பிடிக்கச் சென்றால் அவர்களுக்கு இருக்கக்கூடிய அரசு சலுகைகளைப் பெற வேண்டுமென்று ஏறத்தாழ 15,000 மீனவர்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணத்தை முதலமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டின்மூலம் 10 திட்டங்களையும் கொண்டுவந்தார். இதன்மூலம் 14,000 மீனவர்கள் பயனடைந்தார்கள்.

### மீனவர்களுக்கான பட்டா!

தீவுப் பகுதியில் ஏறத்தாழ 5,000 மீனவர்கள் இது வரையில் பட்டா இல்லாமல் இருந்தார்கள். அந்த 5,000 மீனவர்களுக்கும் பட்டாக்களை வழங்கக்கூடிய மகத்தான திட்டங்களைச் செய்தார். இப்போதும் நான் நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே வலியுறுத்துவது என்னவென்றால், தடைக்கால நிவாரணத்தைப் பற்றி நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தில் ஒன்றும் சொல்லவில்லை. தடைக்காலம் என்பது ஏப்ரல் மாதம் தொடங்கி ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் 61 நாட்கள் மீன் வளத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக இந்திய ஒன்றிய அரசும், நம்முடைய தமிழக மீன்வளத் துறையும் சேர்ந்து, இயற்கை சூழல் அமைதியாக இருக்கக்கூடிய காலத்தில்கூட அவர்கள் மீன் பிடிக்கச் செல்லக் கூடாது என்று தடை விதித்திருக்கிறோம். அந்தக் காலகட்டத்தில் மீனவர்கள் அவர்களுடைய வாழ்வாதாரம் கேள்விக்குறியாக்கப்பட்டு, வீட்டில் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. அவர்களுடைய எதிர்ப்பார்ப்பு 14 மாவட்டங்களில் இருக்கக்கூடிய மீனவர்களுடைய எதிர்பார்ப்பு மீன்பிடி தடைக்காலத்தில் ரூ.8,000ஐ நீங்கள் உயர்த்தி வழங்குவீர்கள் என்று எதிர்ப்பார்த்தார்கள். அது இந்த நிதிநிலை அறிக்கையிலும் இல்லை, நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலும் இல்லை என்பதை நான் இந்த அவைக்கு முன்பாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### மீனவர்களுக்கான தடைக்காலம் போதாது!

குறைவு காலம் என்பது வடமேற்குப் பருவகாலத்திலே ஏறத்தாழ 30 நாட்கள்தான். அந்த குறைவு காலம், இயற்கைச் சீற்றம், ஆழிப்பேரலை, மழை, வெள்ளம் போன்ற காலங்களில் நம்முடைய தமிழக அரசும் வானிலை ஆய்வு மையமும் அறிவுறுத்துகின்றபோதுதான் மீன் பிடிக்கச் செல்ல மாட்டார்கள். அந்த காலம் என்பது 30 நாட்களுக்குள்ளாக தான் இருக்கும். நீங்கள் அந்த 30 நாட்களுக்கு 1,000 ரூபாய் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறீர்கள். அது மீனவர்களுக்குப் போதாது. அவர்கள் எதிர்பார்ப்பது தடைக்காலத்தில் தான் இன்னும் பணம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் நாங்கள் தடைக்காலப் பணம் என்பதை ரூ.20,000 ஆகத் தருவோம் என்று சொன்னார். ஒரே நேரத்தில் அனைத்தையும் உயர்த்த முடியாது. அது எங்களுக்கும் நன்கு தெரியும். ரூ.8,000 என்பதை உயர்த்தித் தருவதற்கான பதிலை நீங்கள் பதிலுரையில் சொல்ல வேண்டுமென்று உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, ஆழ்கடல் மீன்பிடிப்பு குறித்து நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நம்முடைய நிதிநிலை அறிக்கையில் 54வது பக்கத்தில், நம்முடைய நிதித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் 12 கோடி ரூபாய் மீன்வளத்திற்காக, ஆழ்கடல் மீன்பிடிப்பிற்காக ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் என்பது அதேதான்; நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் 89 படகுகளுக்கு நாங்கள் வாங்கிவிட்டோம், 2 படகுகள் கட்டுமானத்தில் இருக்கின்றன. 12 கோடி ரூபாய்தான் கொடுப்போம் என்று நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள், அதையும் தற்போது பார்த்தேன்; உங்களுடைய அறிவிப்பு வந்திருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் விசைப்படகுகள் என்பது 4,400 இருக்கின்றன. நாட்டுப் படகுகள் 44,000 இருக்கின்றன. இயந்திரம் இல்லாத படகுகள் 4,000 இருக்கின்றன. இந்த 12 கோடி ரூபாய் என்பது இந்த விசைப்படகுகளுக்குப் போதுமானதாக இல்லை. இன்னொன்று, இந்த ஆழ்கடல் மீன்பிடிப்பு என்பது நீலப் புரட்சித் திட்டத்தின் மூலமாக 2014 ஆம் ஆண்டு இந்திய ஒன்றிய அரசு அறிவித்த திட்டம். இந்தத் திட்டம் 2019 ஆம் ஆண்டு மக்கள் பயன்பாட்டிற்கு வருகிறது. இது வருகிறபோது நம்முடைய பங்களிப்பு என்பது ரூ.16 இலட்சம், இந்திய ஒன்றிய அரசினுடைய பங்களிப்பு என்பது ரூ.40 இலட்சம்.

வங்கியின்மூலம் கடன் பெறக்கூடியது ரூ.16 இலட்சம், மீனவர்களுடைய பங்களிப்பு ரூ.8 இலட்சம். ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் இந்த ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு நீலப் புரட்சித் திட்டத்தின்மூலம் அறிவிக்கப்பட்டது. ஆனால், இதில் ஏற்கெனவே பயன்பெற்ற 50 மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. எதனால் என்றால், இந்த ரூ.80 இலட்சத்தில் அவர்களுடைய ஆழ்கடல் மீன்பிடிப்புப் படகை, கடலுக்குச் செல்ல முடியாது. உபகரணங்கள் மற்றும் வலைகள் போன்றவற்றை வாங்குவதற்கு ரூ.50 இலட்சம் தேவைப்படும். ஆகவே, ஒரு படகு மீன்பிடிக்கச் செல்வதற்கு ஒரு கோடியே 20 இலட்சம் வேண்டும். ஆனால், இந்த ரூ.80 இலட்சம் என்பது அவர்களுக்குப் போதுமான நிதியாக இல்லை. ஆகவே, மாநில அரசு, எப்படி இந்திய ஒன்றிய அரசு ரூ.40 இலட்சம் பங்களிப்பு தருகிறதோ, அதுபோன்று உங்களுடைய பங்களிப்பையும் நீங்கள் கூட்ட வேண்டும். ஆனால், கூட்டுவதற்கான எந்த ஒரு அறிவிப்பும் இதில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதுமட்டுமல்லாமல், ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு ரூ.12 கோடி என்பது மிக மிக மிக மிகக் குறைவு என்பதை நான் இந்த அவையில் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். குறைவு காலத்திற்கு நீங்கள் ரூ.1,000 ஒதுக்கியிருக்கிறீர்கள், தடைக் காலத்திற்கும் அவர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்; உங்களிடத்தில் நான் இதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இதற்கு முன்பு ஆழ்கடலில் மீன்பிடித்த மீனவர்கள் 49 பேரும் வங்கியினுடைய பல்வேறு பிரச்சினைகளால் தங்களது உடைமைகளை இழந்து நிற்கின்றார்கள். அவர்களை நம்முடைய இந்த அரசின் சார்பில் மானியமோ அல்லது வங்கிக் கடனை பாதுகாப்பதற்கு ஒரு உறுதி செய்ய வேண்டுமென்று உங்களிடத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

### தங்கச்சி மடத்தில் தூண்டில் வளைவு – மீன்பிடித் துறைமுகம்!

இதுமட்டுமல்லாமல், மீனவர் சார்ந்த சிலவற்றை நான் இந்த அவையில் பதிவு செய்ய வேண்டுமென்று நினைக்கின்றேன். இவையெல்லாம் மனதில்கொண்டுதான் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் வழியில் வந்த எங்களுடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள், ராமநாதபுரத்தில் ஏறத்தாழ 3 இலட்சம் மீனவர்கள் வாழ்கிறார்கள். தமிழ்நாட்டின் மீன் உற்பத்தியில் முதல் மாவட்டமாக ராமநாதபுரம் இருக்கிறது. ஏறத்தாழ கடற்கரையின் நீளம் மட்டும் 247 கிலோமீட்டர் இருக்கிறது. 189 கிராமங்கள் இருக்கின்றன. இந்தக் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மீனவர்களுடைய வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்காகவும், இலங்கைப் பிரச்சினையிலிருந்து மாற்றுத் தொழிலுக்கு அவர்கள் செல்ல வேண்டுமென்பதற்காகவும் விதி110 ன்கீழ் ரூ.576 கோடி மதிப்பீட்டில் மகத்தான மூன்று திட்டங்களை அறிவித்தார். தங்கச்சி மடத்தில் தூண்டில் வளைவு மீன்பிடித் துறைமுகம், அதன்மூலமாக அவர்கள் மன்னார் வளைகுடாவிற்குச் செல்லாமல் அரபிக் கடல் பக்கம் தெற்குப் பகுதியில் செல்வதற்கான ஒரு மகத்தான திட்டம். குண்டுக்கல்லில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவோடு துறைமுகம் மற்றும் பாம்பனில் ஒரு தூண்டில் வளைவு என இந்த 3 திட்டங்களும், அந்த மீனவர்களுடைய, ஏறத்தாழ இரண்டு இலட்சம் மீனவர்களுடைய மீன்பிடித் தொழிலை மாற்றுத் திசையில் செல்வதற்கான ஒரு மகத்தான திட்டத்தை விதி110ன்கீழ் அறிவித்தார்கள்.

அதுமட்டுமல்லாமல், இதுவரை எங்களுடைய ராமநாதபுரம் பகுதியில் ‘நங்கூரம்’ என்ற ஒரு பெண் அமைப்பு இருக்கிறது. அந்த மகளிர் அமைப்பு என்பது இயற்கைச் சீற்றத்தால் உயிரிழந்த மீனவர்கள் மற்றும் இலங்கை அரசால் உயிரிழந்த மீனவர்களுடைய அனைத்து கைம்பெண்களையும் உள்ளடக்கிய கைம்பெண் என்ற ஒரு தொண்டு நிறுவனமாக மகளிர் குழுக்கள் முன்னாள் முதலமைச்சரைச் சந்தித்து, எங்களுடைய வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கு நீங்கள் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று முன்னாள் முதலமைச்சரிடத்தில் சொன்னார்கள். 2025 ஆம் ஆண்டு ஏறத்தாழ ரூ.120 கோடி மதிப்பீட்டில் அந்த கைம்பெண் மீனவப் பெண்களுக்காக பல்வேறு தொழில்களை எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) பாசி வளர்ப்பு, தூண்டில் மீன் வளர்ப்பு, நண்டு வளர்ப்பு, பயிற்சியோடு தொழில் புரிவது, படகுக் கட்டுதல், வண்ண மீன்கள் வளர்த்தல், கருவாடு பதப்படுத்துதல், மீன் உற்பத்தி, மீன் சார்ந்த கூட்டுப் பொருட்களை உருவாக்குதல் போன்ற பல்வேறு மீனவச் சங்கங்களை உருவாக்குவதற்காக முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்த நிதியை ஒதுக்கினார்.

ஒதுக்கியது மட்டுமல்லாமல், நம்முடைய மீன்வளத் துறை, தொழிலாளர் நலத் துறை, திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் அலுவலர் பெருமக்கள் மற்றும் மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைந்து அவர்கள் ஒரு திட்ட முன்வடிவமைப்போடு கண்காணிப்புப் பிரிவு வைக்கப்பட்டு, அந்தக் கண்காணிப்புப் பிரிவின்மூலம் அவர்கள் பல்வேறு பயிற்சிகளின்மூலமாக தொழில் ஈட்டியதன் காரணத்தினால்தான் நம்முடைய பகுதியில் மீன் உற்பத்தி அதிகமாக இருந்தது. திராவிட மாடல் ஆட்சியில் கொண்டு வந்த அந்தத் திட்டத்தை தயவு செய்து நீங்கள் தொடர்ந்து நடத்த வேண்டும். அதற்கான நிதி ஆதாரத்தை இதில் நீங்கள் அறிவிக்கவில்லை. கடற்பாசி வளர்ப்பு என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், கடற்பாசி வளர்ப்பு மட்டும் அந்த மீனவப் பெண்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்திவிடாது. கூட்டுப் பொருளோடு தொழிற்சாலைகள், வாசனை திரவியங்கள் போன்ற மீன் சார்ந்த மருத்துவப் பொருட்கள் போன்றவற்றை உள்ளடக்கிய தொழிற்சாலை அங்கு அமைந்தால்தான், மீனவப் பெண்களுடைய வளர்ச்சி இருக்கும் என்பதை உங்களிடத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய ராமநாதபுரத்திற்கு என்று பிரதிநிதித்துவமாகப் பல்வேறு அறிவிப்புகளை முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தந்தார். இவையெல்லாம் மீன்பிடித் தடைக் காலத்திலும், மீன்பிடி குறைவு காலத்திலும் அந்த மீனவர்கள் மாற்றுத் தொழிலுக்குச் செல்ல வேண்டுமென்பதற்காக. இராமநாத சுவாமி கோவிலை பெருந்திட்ட வளாகத்தின்மூலம் சுற்றுலாவை மேம்படுத்துவது, அதுமட்டுமல்லாமல் தனுஷ்கோடியில் பறவைகள் சரணாலயம் ஒன்று அமைத்தார், பூ நாரை சரணாலயம் என்று ஒன்றை அமைத்தார். அந்தச் சரணாலயத்தின் வரலாறு என்னவென்றால், குளிர்ப் பிரதேசமான அட்லாண்டிக் கடல் பகுதியிலிருந்து வரக்கூடிய மத்திய ஆசியாவிலிருந்து வரக்கூடிய பறவைகள் ஏறத்தாழ 107 பறவை இனங்கள் தனுஷ்கோடியில் வந்து இறங்குகின்றன.

### கடல் போக்குவரத்து!

பறவைகள், இனப்பெருக்கத்திற்காக அந்தப் பறவைகள் சரணாலயத்திற்கு, வருகிற காலகட்டங்களில், மீனவர்கள் backwaterல் படகின் மூலமாக சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்று அங்கு பார்க்க விடுவதன் மூலமாக, அவர்கள் பொருளீட்டக்கூடிய மகத்தான திட்டத்தைத் தந்தார். இன்று எங்கள் இயக்கத்தினுடைய கொறடாவாக இருக்கக்கூடிய சிறுதுறைமுகங்கள் துறையின் முன்னாள் அமைச்சர் அவர்கள் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் எங்களுடைய இராமநாதபுரத்திற்கு வருகைதந்து, இராமேஸ்வரத்தில் சிறுதுறைமுகம் தொடர்பான ஓர் ஆய்வினை மேற்கொண்டார். 1914 ஆம் ஆண்டு இலங்கைக்கும், (மணியடிக்கப்பெற்றது)

1914 ஆம் ஆண்டிலிருந்து தனுஷ்கோடி மற்றும் இலங்கை இடையே கடல் போக்குவரத்து இருந்தது. அதன்மூலமாக பல்வேறு பயணிகள் மற்றும் பண்டமாற்று முறைகள் மூலமாக மீனவர்கள் பயன்பெற்றார்கள். ஆனால், 1965ல் தனுஷ்கோடியில் ஏற்பட்ட ஆழிப் பேரலை காரணமாக அந்தப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

அதற்குப் பிறகு எங்கள் இயக்கத்தினுடைய இன்றைய கொறடா அவர்கள், கடந்த காலத்தில் இரண்டு நாட்கள் இராமேஸ்வரத்தில் தங்கி, மீண்டும் இராமேஸ்வரம்இலங்கை கப்பல் போக்குவரத்து மூலமாக நம்முடைய மீனவர்கள், மீன்பிடித் தடைக்காலத்திலும், மீன்பிடி குறைவுக் காலத்திலும், மாற்றுத் தொழிலுக்குச் செல்வதற்கான ஒரு மகத்தான திட்டம் தீட்டப்பட்டது. அந்தத் திட்டத்தை நீங்கள் முன்னெடுக்க வேண்டுமென்று நான் உங்களிடம் கோரிக்கை வைத்துக் கொள்கிறேன்.

### கால்நடை பராமரிப்பு!

அதுமட்டுமல்லாமல், எங்களுடைய இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்தியாவில் இது வரை இல்லாத வகையில், ஒரு திட்டத்தைத் தந்தார். விளையாட்டுத் துறையின் மூலமாக இராமநாதபுரத்தில் சுமார் 50 கோடி ரூபாயில் சர்வதேச நீர்ச்சறுக்கு மற்றும் கடல்சார் விளையாட்டு அகாடமி (International Water Skiing Academy) அமைக்கப்பட்டு, கடல் சறுக்கு விளையாட்டுகளை மீனவர் பகுதிகளுக்கு தந்திருக்கிறார். மீன்பிடித் தொழிலை நம்பியிருக்கக்கூடிய மீனவர்கள், அதன் மூலமாக பயிற்சி பெறுகின்ற காரணத்தினால், 7 கடல் அலைச் சறுக்கு விளையாட்டுகள் மூலமாக மீனவர்களுக்கான வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவற்றையும் நீங்கள் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மீனவர்களுக்கான பல்வேறு திட்டங்களை நான் இந்த இடத்தில் சொல்லியிருக்கிறேன்.

அடுத்து, கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றி சில கருத்துகளை பதிவு செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டில் 27 பாரம்பரிய மாட்டினங்கள் இருந்தன. தற்போது 6 மாட்டினங்கள்தான் நம்மிடத்தில் இருக்கின்றன. காங்கேயம், உம்பளச்சேரி, புலிக்குளம், பர்கூர், ஆலம்பாடி, புங்கனூர் குட்டை ஆகிய 6 வகையான மாட்டினங்கள் மட்டுமே தற்போது இருக்கின்றன. இந்த மாட்டினங்கள் இருக்கின்ற காரணத்தால்தான், தற்போதும் நம்முடைய மண் மலட்டுத் தன்மையில்லாமல் நுண்ணுயிரோடு இருக்கிறது. இந்த மாட்டினங்களைக் காப்பதற்கு ஒவ்வொரு பகுதிகளிலும் ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், நம்முடைய டெல்டா பகுதியில் இருக்கக்கூடிய உம்பளச்சேரி மாட்டினத்திற்கு மட்டும் ஆராய்ச்சி நிலையம் இல்லை. அந்த ஆராய்ச்சி நிலையத்தை நீங்கள் உருவாக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு மண்டலத்திற்குமான ஒரு மாடு வகை இருக்கிறது. கொங்கு மண்டலத்தில் காங்கேயம், தென்மாவட்டங்களில் புலிக்குளம். இந்த மாதிரியான மாட்டினங்களை நீங்கள் காட்சிப்படுத்தி, அதில் சிறந்த மாடுகளுக்கு கால்நடைத் கால்நடைகளில், அடுத்து குதிரை. அந்தியூர் என்ற இடத்தில் இந்த ஆடி மாதம் மட்டும் குதிரைக்கான சந்தை உருவாக்கப்படுகிறது. அதை தனியார்தான் நடத்தி வருகிறார்கள். நம்முடைய அரசு அதிலே கவனம் செலுத்த வேண்டும். வட இந்தியாவிலிருந்து இராஜபுத்திர மன்னர்கள் வைத்திருந்த மார்வாரி குதிரையும், குஜராத்தில் இருக்கக்கூடிய கத்தியவாரி குதிரைகளும் அங்கே கொண்டு வரப்படுகின்றன. இந்தக் குதிரைச் சந்தை, திப்பு சுல்தான் காலத்தில் உருவாக்கப்பட்டது. இதில் நம்முடைய தமிழ்நாட்டினுடைய பூர்வீக நாட்டின குதிரைகள் அழிந்து வருகின்றன. அந்த நாட்டின குதிரைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு, அவற்றிற்கென ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நாய்கள் இனத்தை எடுத்துக் கொண்டால், கீழப்பாவூரில் பாரம்பரிய நாய் இனங்களுக்கு ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. அது, கன்னி, சிப்பிப்பாறை, ராஜபாளையம் போன்ற நாய்களுக்கானது. ஆனால், நம்முடைய தேசத்தில், டெல்டா பகுதியில் பிறந்த ஒரு நாய் இனம் அலங்கு. அந்த இனம் அழிந்து வருகிறது. அதற்கான கல்வெட்டு, ஆதாரங்கள் தஞ்சை பெருவுடையார் கோயிலில் இருக்கிறது. இந்த நாய் இனம் தற்போது வட இந்தியாவில் பஞ்சாப் போன்ற பகுதிகளில் இருக்கிறது. மனிதர்களை விலங்கினத்திடமிருந்து காப்பாற்றி பாதுகாப்பாக வைத்திருக்கக்கூடிய பாரம்பரிய இனங்களில், இரண்டு இனங்கள் அழிந்துவிட்டன. அதேபோன்று மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில், செங்கோட்டை, தென்காசி பகுதிகளில் செங்கோட்டை என்ற நாய் இனம் அழிந்திருக்கிறது. எனவே, ஆராய்ச்சியின் மூலமாக மீண்டும் அந்த நாய் இனங்களை பாதுகாக்க வேண்டுமென்று உங்களிடத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். என்று கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு காதர்பாட்சா முத்துராமலிங்கம் பேசினார்.